**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | | Miscellaneous | : | |
| Preliminary Register | : | | Case No. | : | **S.C.25/2024** |
| Sessions | : | | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 4** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| **Name :** | அய்யாதுரை | **S/o.(or)W/o. :** | ராமசாமி |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of

**21.02.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் வடகரம்பூண்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர்கள் தான். அ.சா.1 –யும் தெரியும். அ.சா.1ன் காட்டுக்கு 2, 3 கொல்லைகள் தாண்டி என் நிலம் உள்ளத. சுமார் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் நான் சோளம் உடைக்க போனேன். அப்போது ஆற்றங்கரையில் நல்லதம்பிக்கும் எதிரிகளுக்கும் தகராறு நடந்ததாக கேள்விப்பட்டேன் நான் நேரில் பார்க்கவில்லை. அ.சா.1 மருத்துவமனைக்கு போனதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 22.01.2017 அன்று காலை சுமார் 9 மணியளவில் திருவாளந்துறை கிராமத்திற்கு உட்பட்ட வாய்க்கால்கரை பக்கத்தில் எனது வயலில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றும்அப்போது நல்லதம்பி அவரது வயலிலிருந்து டிவிஎஸ் எக்ஸ்எல் மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு சென்ற போது வெள்ளாற்றின் மேல்புற வாய்க்கால் கரை அருகே எங்கள் ஊரை சேர்ந்த பெரியசாமி மகன் கல்யாணசுந்தரம், அவருடைய அண்ணன் சாமிதுரை, அவரது பெரியப்பா மகன் அண்ணன் முறை அண்ணன், மாணிக்கம் மகன் சாமிதுரை பங்காளியான செல்லதுரை, மற்றும் பொன்னுசாமி மகன் அழகுவேல் சாமி ஆகியோர்கள் நல்லதம்பியை ஆளுக்கொரு கட்டையால் தேவடியா மகனே சாவுடா என்று அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும் அதனை தடுக்க சென்ற அழகுவேலை அடித்து விடுவதாக மிரட்டியதால் அப்படியே நின்றுவிட்டார் என்றும் நானும் அப்படியே நின்றுவிட்டேன் என்றும் அப்போது அய்யாசாமி மகன் ராமர் வயலுககு போக வந்தவர் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அருகே சென்று எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று எதிரிகளை தடுத்தார் என்றும் நல்லதம்பி இறந்துவிட்டதாக நினைத்து எதிரிகள் அனைவரும் தப்பி சென்றுவிட்டார்கள் என்றும், சம்பவத்தை நானும், துரைசாமி மகன் அழகுவேலும், ரெங்கசாமி மகன் வடிவேலும் நேரில் பார்த்தோம் என்றும் வடிவேல் நல்லதம்பி மகன் அழகுதுரைக்கு தகவல் சொல்லி நல்லதம்பியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்றும், பின்னர் நல்லதம்பியை எதிரிகள் கட்டையால்

அடித்து கொலை செய்ய சதி திட்டம் தீட்டியதை தெரிந்து கொண்டேன் என்றும் 25.09.2023 -ந் தேதி மங்கலமேடு காவல் ஆய்வாளர் விசாரணையில் மேற்கூறியவாறு கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது சொந்த ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு சாதகமாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**மறு விசாரணை**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.